DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -27

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.கொளஞ்சி | Caste: |
| Husband Name: | திரு.ரவி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 23rd day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**23.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடியில் வசித்து வருகிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். இப்போதிலிருந்து சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் நான் காலை சுமார் 8.00 மணிக்கு புறப்பட்டு கரும்பு வெட்டும் வேலைக்கு போய்விட்டேன். அன்று பிற்பகல் நேரத்தில் எங்கள் ஊரில் கொலை நடந்ததாக பேசிகொண்டார்கள்.

நான் உடனே வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் எதனையும் பார்க்கவில்லை. காசிநாதன், தர்மலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறுஎதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலிசார் விசாரணையில் நான் எங்கள் ஊர் காளியம்மன் கோவில் கட்டியதிலிருந்து காசிநாதனை சேர்ந்தவர்களும், ரவிசந்திரனை சேர்ந்தவர்களும் இரண்டு பிரிவுகளாக இருந்து வந்ததாகவும், 2007 ஆம் ஆண்டு காசிநாதன் குடும்பத்தினர் ரவிசந்திரன் பிரிவை சேர்ந்த தேசிங்குபாலனை கொலை செய்துவிட்டதாகவும் அதனால் பகை அதிகமாகிவிட்டதாகவும், ரவிசந்திரன் தரப்பை சேர்ந்தவர்கள் காசிநாதனையும், அவரது குடும்பத்தினரையும் அடியோடு ஒழிக்கவேண்டுமென்று பேசிகொண்டிருந்ததாகவும், 16.05.2008 அன்று நான் ஊருக்கு போய்விட்டு மாலை 5.00 மணிக்கு வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது ஊரில் கொலை நடந்துவிட்டதாக பேசிகொண்டார்கள் என்றும் நான் சொல்லவில்லை.

நான் போலிசார் விசாரணையில் நான் விசாரித்தபோது அன்று காலை 10.00 மணியளவில் எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம் ஆகியோர் சுரேசை வெட்டிகொன்றதாகவும், எதிரிகள் பழனிசாமி, பிரபாகரன் ஆகியோர் பிரபுவை வெட்டி கொன்றதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை கொய்து காளியம்மன் கோவில் பின்புறம் வைத்ததாகவும், எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை வெட்டி கொன்றதாகவும், எதிரிகள் சக்திவேல் மகன் ரமேசும், பாஸ்கரும் தர்மலிங்கத்தை வெட்டி கொன்றதாகவும், எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை தனியாக வெட்டி எடுத்து காளியம்மன் கோவிலின் எதிர்புறமுள்ள சூலத்தில் குத்தியதாகவும், எதிரிகள் ரமேஷ், சிலம்பரசன் ஆகியோர் காசிநாதனை வெட்டி கொன்றதாகவும், எதிரி திருவாளப்புத்தூர் ரமேஷ் என்பவர் சாட்சி ஜானகியை வெட்டியதாகவும், காயமடைந்த ஜானகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக நான் கேள்விபட்டதாகவும், மேற்கண்ட கொலைகளை செய்வதற்கு எதிரிகள் சசிகலா, கனகவள்ளி, காளிதாஸ், ஸ்ரீதர், விஜய், ஜவகர்பாபு, சுரேஷ் ஆகியோர் உதவியாக இருந்ததாகவும், நான் கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில்

சொல்லவில்லை.

போலிசார் விசாரணையில் தேசிங்குபாலன் கொலைசெய்யப்பட்டதற்கு பழிவாங்கவேண்டும் என்று சொன்னதற்கேற்ப எதிரிகள் ஒன்றுசேர்ந்து சதிதிட்டம் தீட்டி மேற்கண்ட 5 நபர்களை வெட்டி கொலை செய்திருக்கிறார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

நான் கேள்விபட்ட உண்மை சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தினத்தன்று தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். அதற்குபின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் இடையிலும் என்னை விசாரித்தார்கள். நான் வங்குடி மேலத்தெருவில் வசிக்கிறேன். தேசிங்குபாலன் கொலைக்கு பின்னிட்டு எங்கள் ஊரில் அன்றாடம் 10 முதல் 20 போலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

சம்பவதினத்தன்று காலையில் நான் வேலைக்கு புறப்பட்டு சென்றபோது எங்கள் ஊரில் போலிசார்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. தேசிங்குபாலன் கொலைக்கு பின்னிட்டு எங்கள் ஊருக்கு பாதுகாப்பு பணிக்கு வரும் போலிசார் காலை சுமார் 10 மணிக்கு வந்துவிட்டு இரவு 10.00 மணிக்கு புறப்பட்டு சென்றுவிடுவார்கள் என்றால் எனக்கு நேரம் தெரியவில்லை ஆனால் போலிசார் வருவார்கள்.

நான் காலை 8.00 மணிக்கு வழக்கமாக வேலைக்கு சென்றுவிடுவேன். நான் பிற்பகல் 2.00 மணிக்கு ஊருக்கு திரும்பியபோது போலிசாரை மட்டும் தான் பார்த்தேன். இறந்தவர்களின் சடலங்கள் எதனையும் நான் பார்க்கவில்லை. நான் ஊருக்கு திரும்பிய சமயத்தில் எனது ஊரை சேர்ந்த சுமார் 150 பேரை போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்துசென்றுவிட்டார்கள் என்று நான் கேள்விபட்டேனா என்றால் இல்லை.

தேசிங்குபாலன் கொலைக்கு பின்னிட்டுஎங்கள் ஊருக்கு பாதுகாப்பு பணிக்கு

வந்த போலிசார் தான் சம்பவதினத்திற்கு முன்பாகவும், சம்பவதினத்திற்கு பின்னிட்டும் எங்கள் ஊரில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் இவ்வழக்கு சம்பவம் பற்றி நான் எதுவும் கேள்விபடவில்லை என்று தான் சொல்லியிருக்கிறேன்.

போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றாலும், போலிசார் என்னை விசாரித்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.